# மக்கள் ஆய்வு

## People Studies

*Multi-Disciplinary Research Institute*

*சார்பாக*

**பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்**

*வழங்கும்*

## *சமூகவரைவியல் நோக்கில் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்*

# மாநில அளவிலான கணிப்பியல் ஆய்வு முடிவுகள்

*கள ஆய்வு நடந்த நாள்கள்:*
2016 ஏப்ரல் 24 - மே 10

*ஊடகவியலார் சந்திப்பு:*

13 மே 2016, 11.00 மணி

*இடம்:*

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002


*தொடர்புக்கு:*

மக்கள் ஆய்வு (People Studies)
122 வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை 600 094
கிராமிய மக்கள் ஆய்வு & பயிற்சி மையம்
பளியன்குடி விலக்கு, மேலக்கூடலூர் கிராமம், லோயர் கேம்ப், தேனி மாவட்டம்
செல்: 8870341318 (தலைமை அலுவலகம்) / 8870431319 (களப் பணியகம்)
மின்னஞ்சல்: peoplestudies@gmail.com


---

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே"

# Sociographical Enquiry into Factors Impacting on the Electoral Choices

## *A Longitudinal Study of Thamizh Nadu Voters*

People Studies has been engaged in people-based knowledge-action studies, particularly psephological studies, since 2000. The findings of these indepth studies have served as re/source materials for seminars and campaigns in tune with the motto, “Studying the People is For the People.”

The present report is a part of the broader longitudinal [trend] study of Thamizh Nadu voters with the focus on sociographical enquiry into factors impacting on the electoral choices in the context of 2016 elections. The entire field-based study is designed and executed by Dr S. Rajanayagam for People Studies employing his own original psycho-sociographic approach blending quantitative and qualitative aspects.

With this cross-sectional study, four such studies are completed [November 2014, August 2015, January 2016, May 2016]. The next and the final phase will be conducted after the new government is formed. The final triangulated findings of the studies will be the position papers for research seminars and advocacy programmes.

The findings on the following pages are from the Phase IV Cross-Sectional Study, May 2016.

---

# சமூகவரைவியல் நோக்கில்
# தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்
## *தமிழக வாக்காளர் குறித்த ஓர் நீளாய்வு*

“மக்களை ஆய்வது மக்களுக்காகவே” என்ற இலட்சியத்தோடு, களம்சார் ஆய்வுகளில், சிறப்பாக கணிப்பியல் ஆய்வுகளில், கடந்த 2000 முதல் தனித்துவ முத்திரை பதித்துள்ளது மக்கள் ஆய்வு (People Studies). இந்த நூற்றாண்டில் தமிழக அரசியல்-பண்பாட்டுக் களத்தில் நிகழ்வுகளை நுணுக்கமாக ஆய்ந்து தொடர்ந்து பதிவு செய்து வந்துள்ளது.

கணிப்பியலைப் பொருத்தவரை, மக்கள் ஆய்வின் சார்பாகப் பேராசிரியர் ச. ராஜநாயகம் மேற்கொண்ட அனைத்து ஆய்வுகளுமே மக்களின் எண்ணப்போக்குகளை / திசைகளை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளன. இதற்குக் காரணம் பேரா. ராஜநாயகத்தின் தனித்துவமான, தமிழ்/ இந்தியப் பண்பாட்டில் தோய்ந்த ஆய்வு அணுகுமுறையாகும். நவீனத் தமிழகம் குறித்த மேலாய்வுகளுக்கு (meta-analysis) உதவியாக, அவரின் கணிப்பியல் துறை ஆய்வுகள் “நீரோட்டம் - பண்பாட்டு அரசியலும் அரசியல் பண்பாடும்” என்ற நூலாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

மக்களை மையப்படுத்திய அறிவு-ஆய்வுச் செயல்பாடுகளின் ஓரம்சமாக, தமிழக வாக்காளர்களின் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளைச் சமூகவரைவியல் நோக்கில் இனம் காணும் ஒரு நீளாய்வைத் தற்போது மக்கள் ஆய்வு மேற்கொண்டுள்ளது. நவம்பர் 2014 தொடங்கி வரும் ஜூலை-ஆகஸ்ட் 2016 வரை அய்ந்து கட்டங்களாக நடைபெறும் இந்த ஆய்வை மக்கள் ஆய்வுக்காக பேரா. ச. ராஜநாயகம் வடிவமைத்து நடத்தி வருகிறார்.

அடுத்து வரும் ஆய்வு முடிவுகள் மே 2016, நான்காம் கட்ட குறுக்காய்விலிருந்து பெறப்பட்டவை.

## *ஆய்வுப் பின்னணி*

சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரம் உச்சத்தில் உள்ள நிலையில் மக்களின் எண்ண ஓட்டங்களையும் அவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்திவரும் காரணிகளையும் பதிவுசெய்ய மாநில அளவிலான ஆய்வினை மக்கள் ஆய்வு (People Studies) மேற்கொண்டது.

முக்கால்வாசி (177) சட்டமன்றத் தொகுதிகளில் (அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும்) ஏப்ரல் 24 முதல் மே 10 முடிய, பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில், 8064 பேரிடம் *சமூக-உளவியல் அணுகுமுறை* வழி மக்களின் எண்ண ஓட்டங்கள் பதிவுசெய்யப்பட்டன.

ஆண்கள் பெரும்பான்மையாக (60 விழுக்காடு) பங்கேற்ற இந்த ஆய்வில், வரும் சட்டமன்றத் தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்க உள்ளோர் 11.9. வயது 30 வரை - 26.0, வயது 31 முதல் 45 வரை - 35.3, வயது 46 முதல் 60 வரை - 21.7 (மீதி - வயது 60-க்கு மேல்). *கல்விரீதியாக*, படிக்காதவர்கள் மற்றும் ஆரம்பக் கல்விவரை - 14.8, வகுப்பு 6 முதல் 12 வரை - 49.7, கல்லூரி அல்லது தொழிற்கல்வி - 35.5. *தொழில்ரீதியாக,* கூலி வேலை மற்றும் விவசாயம் செய்வோர் - 21.9, சிறிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் - 16.7, பெரிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் - 10.0, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் - 28.2, அரசு ஊழியர் - 6.5, மாணவர்கள் - 10.0 (மீதி - பிற தொழில்கள் / வேலையில்லாதோர்). *சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் - 26.8, மிகவும் பிற்படுத்தப் பட்டோர் - 25.8, பிற்படுத்தப்பட்டோர் - 38.0 (மீதி - பிற (உயர்) சாதியினர் / தகவல்தர விரும்பாதோர்). *மதரீதியாக,* இந்துக்கள் - 89.1, இஸ்லாமியர் - 5.6, கிறிஸ்தவர் - 4.5 (மீதி - பிற மதத்தினர் / பதில் தெரிவிக்காதோர்).

## *ஆய்வு முடிவுகள்*

***(1) அரசியல் செய்திக்கான ஊடகம்:*** அரசியல் குறித்த செய்திகளை அச்சடிக்கப்பட்ட செய்தித்தாள்கள் வழியாகத் தெரிந்துகொள்வதாக ஏறத்தாழ நான்கில் ஒருவர் (24.4) சொன்னாலும், மூன்றில் இருவருக்குச் சற்று குறைவான (64.6) மக்களுக்குத் தொலைக்காட்சியே முதன்மையான அரசியல் செய்தி ஊடகமாக உள்ளது. கைபேசி (4.4) மற்றும் மேசை/மடிக் கணினியை (0.9) செய்திக்காகச் சார்ந்திருப்போர் தமிழக அளவில் மிகச் சிறுபான்மையினரே. (அரசியல் செய்திகளில் ஆர்வமில்லாதவர்கள் 3.7).

மேலுள்ள செய்தி நுகர்வுக்கான ஊடகப் பயன்பாட்டைக் காணும்போது சில அரசியல் கட்சிகளும் கருத்தாளர்களும் சமூக ஊடகங்களுக்கு (social media) தரும் அரசியல் முக்கியத்துவம் மிகைப்படுத்தப்பட்டதாக உள்ளதை ஊகிக்கலாம். இது குறித்த விரிவான ஆய்வை மக்கள் ஆய்வு முன்னெடுத்துள்ளது.

***(2) மது/விலக்குக் கொள்கை:*** கடந்த ஜனவரிக் கணிப்பில் வெளிப்பட்டது போலவே, மது / விலக்கு குறித்த கட்சிகளின் நிலைப்பாடு, தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு இல்லை என்பதே பெரும்பான்மைக் கருத்து (42.1). தாக்கம் இருக்கும் என உறுதியாகச் சொல்வோர் 36.2. ஏதோ கொஞ்சம் இருக்கலாம் என்போர் 20.5. இதனால் எந்தக் கட்சிக்குப் பாதிப்பு, எதற்கு ஆதாயம் என்ற கேள்விக்குத் தெளிவான பதில்கள் பதிவாகவில்லை.

***(3) அதிமுக ஆட்சி குறித்த மதிப்பீடு:*** கடந்த அய்ந்தாண்டு அதிமுக ஆட்சியைக் குறித்த மக்களின் மதிப்பீடு அரசின் மீது பெரிய அளவில் வெறுப்போ பெரிய அளவில் நிறைவோ இல்லை என்பதைக் காட்டுகிறது. அதிமுக ஆட்சி மிக நன்று - 12.5, நன்று - 33.9. மோசம் - 15.3, மிக மோசம் - 15.6, மோசம் என்று சொல்ல முடியாவிட்டாலும் நிறைவைத் தருவதாக இல்லை - 22.1. முந்தைய ஜனவரி கணிப்போடு ஒப்பிடுகையில், கடந்த ஓரிரு மாதங்களில் மக்களைச் “சமாதானம்” செய்வதில் அதிமுக அரசு ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளதை அறிய முடிகிறது. எனினும், வாக்காளரின் கட்சி சார்பையும் ஆட்சி குறித்த மதிப்பீட்டையும் குறுக்காக அட்டவணைப் படுத்தினால் (cross tabulation), அதிமுக ஆதரவாளர்கள் ஆட்சியை உயர்வாகவும், மாற்றுக் கட்சியினர் எதிராகவும் மதிப்பிடுகின்றனர்.

***(4) அடுத்த அரசு பற்றிய யூகம்:*** பிரச்சாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில் மக்களிடையே பரவலாக நிலவும் பேச்சின் அடிப்படையில், இந்தச் சட்டமன்றத் தேர்தலில் எந்தக் கூட்டணி ஆட்சி அமைக்கும் என்ற ***யூகத்தில்*** அதிமுக அணியை விட ஆறு புள்ளிகள் அதிகம் பெற்று திமுக அணி முன்னிலையில் இருக்கிறது.

| ***ஆட்சியில்...*** | ***யூகம்*** |
|---|---|
| திமுக அணி | 42.7 |
| அதிமுக அணி | 36.6 |
| தேமுதிக-மநகூ-தமாகா அணி | 7.9 |
| பாமக அணி | 3.0 |

(மீதி - பிற அணிகள் / கட்சிகள் மற்றும் பதில் சொல்லாதோர்)

ஜனவரியில், அணிகள் அமையாத - ஆனால் தேமுதிக-திமுக கூட்டணி அமையலாம் என்ற எதிர்பார்ப்பு உலவிய சூழலில் - திமுக-விற்கான ஆதரவு இரண்டு புள்ளிகள் முன்னிலையில் இருந்தது. இப்போது அணிகள் இறுதிசெய்யப்பட்ட நிலையில், இந்த வேறுபாடு மும்மடங்கு அதிகரித்துள்ளது.

***(5) அடுத்த முதல்வர்:*** களம் காணும் கூட்டணிகள் முன்னிறுத்தியுள்ள முதல்வர் வேட்பாளர்களில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெற்று கருணாநிதி முதலிடத்தில் இருக்கிறார்.

| | |
|---|---|
| கருணாநிதி | 41.1 |
| ஜெயலலிதா | 31.7 |
| விஜயகாந்த் | 10.1 |
| அன்புமணி | 6.0 |
| சீமான் | 1.9 |

வரையிலி (open ended) வினாவாக இக் கேள்வி முன்வைக்கப்பட்டதால், மேலுள்ள பெயர்கள் தவிர, நல்லகண்ணு, திருமாவளவன், வைகோ, தமிழிசை சௌந்தர்ராஜன், சகாயம் ஆகிய பெயர்களோடு, மோடி, கெஜ்ரிவால் ஆகிய பெயர்களும், யாராவது புதிய நபர், ஜனாதிபதி ஆட்சி முதலிய பதில்களும் ஒன்றிரண்டு நபர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

***(6) இன்று வாக்களிக்கும் விதம் :*** களஆய்வு நடந்த காலகட்டத்தில், நடப்பு அரசியல் சூழலின் பின்னணியில், இன்று வாக்களிப்பதாக இருந்தால், பெரும்பான்மை வாக்குகளுடன் திமுக முதலிடத்திலும் அடுத்த இடத்தில் அதிமுக-வும் நிற்கின்றன. களத்தில் நிற்கும் அணிகள் மாநில அளவில் பெறும் சராசரி வாக்கு விகிதம்:

| | |
|---|---|
| திமுக அணி | 40.7 |
| அதிமுக அணி | 31.8 |
| தேமுதிக-மநகூ-தமாகா அணி | 10.4 |
| பாமக அணி | 5.9 |
| நாம் தமிழர் கட்சி | 1.8 |
| பாஜக அணி | 1.6 |
| சுயேட்சை/பிற கட்சிகள் | 0.7 |
| நோடா (NOTA) | 5.5 |
| பதில்தர விரும்பாதவர்கள் | 1.6 |

♣ இவை மாநில அளவிலான சராசரி வாக்குகள். தொகுதி அளவில் வாக்கு விகிதங்களில் பலத்த வேறுபாடுகள் இருப்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

♣ மேலுள்ள அட்டவணையை நோக்கும்போது, கடந்த ஆய்வுகளில் வெளிப்பட்டது போலவே, இந்த 2016 சட்டமன்றத் தேர்தல் தலையாயதாக அதிமுக-வுக்கும் திமுக-வுக்கும் இடையேயான போட்டியாக இறுதிவடிவம் பெற்றுள்ளது.

♣ திமுக-அதிமுக-வுக்கு இடையே வாக்களிப்பதில் 8.9 புள்ளிகள் வேறுபாடு இருப்பினும் யூகத்தில் 6.1 புள்ளிகள் மட்டுமே வேறுபாடு உள்ளது. அதாவது, மேலோட்டமாக மக்கள் மத்தியில் உலவும் அதிமுக-வுக்கு ஆதரவான பேச்சு சற்று மெதுவாக மாறிவரும் வேளையில், திமுக அணியின் பக்கம் மக்கள் கவனம் குவியத் தொடங்கிவிட்டதை அறியலாம்.

***(7) வாக்களிப்பதன் அடிப்படை:*** எந்த அடிப்படையில் வாக்களிக்கிறீர்கள் என்ற கேள்விக்கு, வழக்கமாக வாக்களிக்கும் கட்சி என்ற அடிப்படையில் என்பது முதன்மைப் பதிலாகவும், தொடர்ந்து, தேர்தல் அறிக்கை, கட்சியின் செயல்பாடுகள் ஆகியவையும் பதிவாகியுள்ளன. முக்கியப் பதில்கள் கீழே:

| | |
|---|---|
| வழக்கமாக வாக்களிக்கும் கட்சி | 21.1 |
| தேர்தல் அறிக்கை | 16.5 |
| கட்சியின் செயல்பாடுகள் | 15.7 |
| வாக்குக்குக் "கவனிப்பு" | 13.3 |
| கட்சித் தலைமை | 8.7 |
| கட்சி உறுப்பினர் | 8.2 |
| கட்சிக் கொள்கை | 8.0 |
| சாதிப் பற்று | 4.8 |
| வேட்பாளர் | 2.8 |

மேலுள்ளவை வாக்காளர் அறிந்தே செய்பவை / சொல்பவை எனினும், புள்ளியியல்ரீதியாக எந்த அளவுக்கு வாக்களிக்க முடிவெடுக்கும் செயலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தொடர்ஆய்வுக்கான பொருளாகும். மக்கள் ஆய்வு மேற்கொண்டுள்ள நீளாய்வின் அடுத்த கட்டத்தில் இது கவனத்தில் கொள்ளப்படும்.

***(8) நீளாய்வு நோக்கில் திமுக-அதிமுக:*** 2014 நவம்பர் கணிப்பு தொடங்கி தற்போதைய கணிப்பு வரை நான்கு குறுக்காய்வு முடிவுகளை ஒப்பிடும்போது, இந்தத் தேர்தலில் முதலிரு இடங்களில் மிக வலுவாக அமர்ந்துள்ள திமுக, அதிமுக ஆகிய இரு கட்சிகளும் முறையே தொடர் வளர்ச்சியையும் தொடர் தளர்ச்சியையும் எதிர்கொண்டு வந்துள்ளன.

| | *மே 2016 | ஜனவரி 2016 | ஆகஸ்ட் 2015 | நவம்பர் 2014 |
|---|---|---|---|---|
| அதிமுக | 31.8 | 33.3 | 34.1 | 43.0 |
| திமுக | 40.7 | 33.1 | 32.6 | 26.0 |

(*மே 2016 வாக்குகள் அணிக்கானவை, பிறவற்றில் தனிப்பட்ட கட்சிகளுக்கானவை)

***(9) கட்சிகளும் இடங்களும்:*** கடந்த ஒன்றரை ஆண்டுகளில் திமுக-வின் சீரான வளர்ச்சி, அதிமுக-வின் தொடர் தேய்வு, ஆறு முனைப் போட்டி, புவியியல் மற்றும் சாதிரீதியாக வலுவான கட்சிகள், மதரீதியான சாய்வுகள், தொகுதி அளவில் வேட்பாளர் ஏற்புடைமை, வாக்குக்குக் கவனிப்பை எதிர்நோக்கும் வாக்காளர் மனநிலை, கருத்துருவாக்கத்தில் ஊடகங்களின் பங்கு, ஒரு வாக்கு வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் இந்தியத் தேர்தல் முறை ஆகிய பல்வேறு காரணிகளையும் கருத்தில் கொண்டு எந்தக் கட்சிக்கு எத்தனை இடங்கள் என்பதைக் கணக்கிடும் சூத்திரம் எதுவும் இல்லை. எனினும் மக்கள் ஆய்வின் தனித்துவ அணுகுமுறையை அடியொற்றி, கீழ்வரும் முடிவுகளைக் கூறலாம்.

திமுக-அதிமுக இடைவெளி தற்போதைய இடத்தில் உறையும் நிலையில்:
திமுக - 118 - 120 / காங்கிரஸ் - 8 - 10 / அதிமுக+ - 94 - 96 / தேமுதிக-மநகூ-தமாகா - 6 - 8 /
பாமக - 5 - 7 / பாஜக - 1 - 3 / பிற - 2 - 4.

திமுக-அதிமுக இடைவெளி இதே வேகத்தில் மேலும் தொடரும் நிலையில்:
திமுக - 140 வரை / காங்கிரஸ் - 15 வரை / அதிமுக - 65 வரை.

ஆனால் இந்த விகிதாச்சாரம் மாறவும் நமது தேர்தல் முறையில் இடமுண்டு. களஆய்வின்போது வாக்காளர்கள் பகிர்ந்துகொண்டவை, தேர்தல் களத்தில் நுணுகி நோக்கியவை, தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு ஆகியவற்றை வைத்துப் பார்க்கையில், வாக்குக்குக் கவனிப்பை எதிர்நோக்கும் வாக்காளர் மனநிலை, ஆறு முனைப் போட்டிச் சூழலில் ஒரு சில கட்சிகள் / வேட்பாளர்கள் தமது வாக்குகளை வேறொரு கட்சிக்கு அளிக்க உடன்படுதல் ஆகிய இரு அம்சங்களும் கடைசி நேர மாறுதலைத் தீர்மானிக்கும் காரணிகள்.

அத்தகைய சூழலில், அதிமுக 115 இடங்கள் வரையிலும், திமுக 105 இடங்கள் வரையிலும் பெறக்கூடும். ஆட்சி அமைப்பது பிற கட்சிகளின் ஆதரவைப் பொறுத்து அமையும்.

***(10) தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு:*** கடந்த தேர்தல்களில் இல்லாத அளவுக்கு வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வுப் பரப்புரையில் ஈடுபட்டுள்ளதை ஆங்காங்கே பாராட்டும் குரல்களைக் கேட்க முடிகிறது. ஒட்டு மொத்தமாக, தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளுக்குப் பாராட்டை விடக் கண்டனம் அதிகமாக வெளிப்படுகிறது.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு:

| | |
|---|---|
| மிக நன்று | 7.1 |
| நன்று | 15.9 |
| சராசரி | 14.7 |
| மோசம் | 31.8 |
| மிக மோசம் | 27.3 |

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர், மக்கள் ஆய்வு
13 மே 2016

*கவனத்திற்கு:* (1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப் பட்டுள்ளதால், சதவீதங்களின் கூட்டுத்தொகை 100-ஐ விடக் குறைவாக இருக்கலாம்.

© People Studies, May 2016. No part / aspect of this Research Report may be used for purposes other than genuine journalistic reporting without written permission from People Studies.

## நீரோட்டம்:
### அரசியல் பண்பாடும் பண்பாட்டு அரசியலும்

---

*களஆய்வுகளில் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழகம்*

*வெறுமனே தேர்தலை முன்வைத்த கணிப்புகளுக்கு மாறாக, தேர்தல் பின்புலத்தில் மக்களை மையப்படுத்திய, நேர்மையான, நடுநிலையான, நம்பகமான, வெளிப்படையான, துணிச்சலான களஆய்வுகளாக இருப்பதால், வரலாறு வரைவுக்கான மூல ஆவணங்களில் நீரோட்டம் என்ற இந்த நூலும் ஒன்றாகத் திகழ்கிறது.*

*இந்த நூற்றாண்டில் இதுவரை தமிழகம் / தமிழர்கள் பயின்று வந்துள்ள பாதைகள், பார்வைகளின் திசைகள், உந்து விசைகள், எதிர்கொண்டுள்ள சவால்கள் / சவடால்கள், அவற்றின் பின் உறைந்துள்ள / சிதைந்துள்ள வரலாறுகள், பண்பாட்டு ஆணிவேர்கள் / எச்சங்கள், அரசியல் கணக்குகள் / பிணக்குகள், தேர்தல் சூத்திரங்கள் / சாத்திரங்கள், ஊடகச் சித்து விளையாட்டுக்கள்... என நிகழ்கால வரலாறு வரைவியலின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கே திரட்டித் தருகிறது.*

*ஆய்வாளர்கள், அரசியல் நோக்கர்கள், அரசியல்வாதிகள் தமிழகப் பண்பாடு-அரசியல் பரிணாமங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள மேலாய்வு செய்வதற்கான தரவுகளின் பெட்டகமாக விளங்குகிறது.*

*மக்கள் பெயரைச் சொல்லி / மக்களை அணுகி மேற்கொள்ளப்படும் ஆய்வு எத்தகையதாக இருந்தாலும் அந்த ஆய்வின் முடிவுகளை அறிந்து கொள்ளும் உரிமை ஆய்வுசெய்யப் பயன்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டு. அவ்வாறே, வெகுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க விதத்தில் ஆய்வுகள் குறித்த விவரங்களை வெளிப்படையாக வைத்திருக்க வேண்டிய கடமை ஆய்வாளருக்கு உண்டு. இத்தகைய கருத்தியல் பின்னணியில், "மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கைவாக்கை மெய்ப்பிக்கும் மற்றொரு முயற்சி நீரோட்டம்.*

*ஆசிரியர்: ச. ராஜநாயகம் / வெளியீடு: **மக்கள் ஆய்வகம்** /* ISBN: 978-81-910217-9-0

---

## POPULAR CINEMA AND POLITICS IN SOUTH INDIA
### REIMAGINING MGR AND RAJINIKANTH

This work breaks new ground in the understanding of South Indian cinema and politics. Through incisive analysis and original concepts it illustrates the private, public and cinematic personas of MGR and Rajinikanth. It challenges the popular and scholarly myths surrounding them and shows the constant negotiation of their on-screen and off-screen identities. The book revisits the entire political history of post-Independent Tamil Nadu through its cinema, and presents a refreshing psycho-political and cultural map of contemporary South India. Replete with illustrative diagrams and graphs that lay bare the tropes of South Indian films, this work will be a major intervention in the understanding of Indian cinema.

This absorbing volume will be an important read for scholars, teachers and students of film studies, culture and media studies, and politics, especially those interested in South India.

***Author:* S. Rajanayagam / *Publisher:* Routledge / *ISBN:* 978-1-13-882203-0**
*Visit:* http://www.routledge.com/books/details/9781138822030

---